
குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : சுன்னாகம்,
இலங்கை.

வெளியீடு 1.

உ
சிவமயம்

# ஆலயப்பிரவேசம்



இது
வேதாகம சைவசித்தாந்த சபைக்
காரியதரிசி

## திரு. செ. சோமசேகரம் அவர்கள்

சுன்னுகம் பிள்ளையார் கோயிலில்
ஆவணி மாதம் 7-ம் திகதி செய்த
பிரசங்கம்.

அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்த சபை
கலியப்தம் 5069 பிலவங்க வருஷம் ஆவணி மாதம்.

# ஆலயப்பிரவேசம்

இன்று ஆலயப்பிரவேசம் என்ற ஒரு பிரச்சனை சைவ சமயத்தவரிடையில் புகுந்து நிற்கின்றது. சமய அறிவு குன்றியிருப்பதினாற்றான் அப்பிரச்சனை தோன்றியுள்ளது. சைவசமயத்தவரிடையில் ஒரு குழப்பமான மனோநிலையை ஏற்படுத்தியது, மேல்நாட்டு நாகரீக மயக்கம் என்பதேயாகும்.

மேல்நாட்டு நாகரீகம் புறச்சமயமாகிய கிறீஸ்தவ மதக் கொள்கையின் அடிப்படையிலேயே வளர்ந்து வந்துளது. அதன் கொள்கைகளாவன: ஆன்மா (soul) மனிதனுக்கு மட்டுமேயுண்டு; மனிதன் மறுபிறப்புப்பெறுவதில்லை; முற்பிறவி என்பதுமில்லை; முற்பிறப்பில்லாதபடியினால் இப்பிறப்பும் பழைய கர்மத்தின் பலனுக்கேற்ப உடம்பை மனிதன் பெறவில்லை; எனவே, எல்லோரும் ஒரு தன்மையாகவே பிறக்கின்றார்கள்; வித்தியாசங்கள் சூழ்நிலையினாற்றான் ஏற்படுகின்றன என்ற கொள்கைதான் சைவ சமயத்தவரிடையே பரவி நிற்கின்றது. அதனால், பலர் உண்மையை அறியாது மயக்கமுற்றிருக்கின்றனர்.

அவர்களுக்குச், சிவபெருமானால் அருளப்பட்ட வேதசிவாகமங்கள் புறநாட்டிலிருந்து வந்த ஆரியர் என்று எண்ணப்படும் பிராமணரால் கட்டிவைக்கப்பட்ட விதிகளும் தோத்திரங்களும் அடங்கியிருக்கும் நூல்களேயென்றும், தமிழிலே உள்ள வேதாகமங்களையும் அதில் விற்பன்னராகவிருந்த திராவிடவிற்பன்னராகிய அறிஞர்களையும் கடல்கொண்டு சென்று விட்டதென்றும் எண்ணிச் சைவர்கள் மேல் நாட்டு நாகரீகத்தில் மயக்கமுற்று இருக்கின்றார்கள். அதனால் பிராமணரால் ஆக்கிய ஆகமங்களைக் காலத்திற்கேற்றவாறு திருத்தியமைக்கவேண்டும் என்றும் கருதுகிறார்கள். சிவபெருமானால் வடமொழியில் அருளப்பட்ட வேதசிவாகமங்கள் சனாதன தர்மமாகும். அவைகளைக் காலத்துக்கேற்ற முறையில் திருத்தியமைக்க எவருக்கும் அதிகாரமில்லை.

"வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவனூல்" எனத் திருமூலர் கூறிப்போந்தார்.

எங்கள் சபையின் பழைய தலைவரும் இப்போது போஷகருமாக இருக்கின்ற "அச்சுவேலிக் குருக்கள்" என்று அழைக்கப்படும் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்களின் பெருமுயற்சியால் "ஆலய சேவை" என்னும் நூல் நான்காம் பதிப்பாக வெளிவந்திருக்கின்றது. அதைப் பெற்று வாசிப்பவர்கள் ஆலய பரிபாலனம் எப்படிச் நடைபெற வேண்டும் என்பதை உணர்வார்கள்.

இச் சபையின் மூலகர்த்தாக்களில் ஒருவரும் இப்போ உபதலைவருமாக விளங்குகின்ற திரு. க. சோமசுந்தரம் B. A. அவர்கள் கந்தவனக் கடவையிற் கூடிய மகாநாட்டில் கலியப்தம் 5035 பவவருஷ சித்திரை மீ செய்த பிரசங்கம் (கி. பி. 1933-இல்) சைவாபிமான சபையினரால் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதில் அவர்கள் 'ஆசௌசம்' என்று சொல்லப்படும் தீண்டாமை ஆசாரத்தை குறித்து விஞ்ஞான ரீதியிலும் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பெற்று வாசித்தால் உண்மைக் கருத்துக்களை அறியலாம்.

ஒரு நாள் ஒரு நண்பர், "தாய் நாடாகிய இந்தியாவில் ஆலயப்பிரவேசம் நடந்து விட்டது; அங்குள்ள வேதாகம விற்பன்னர்கள் ஏன் எதிர்ப்புக் குரல் காட்டவில்லை?" என்று கேட்டனர். உடனே யான், "தாய் கள்ளுக்குடிக்கப் பழகினதால் மகளும் கள்ளுக்குடிக்கப் பழகவேண்டுமோ?" என்று கேட்டதுடன் அவர் வாயடைத்துப் பேசாதிருந்துவிட்டார். மேலும் தொடர்ந்து அவருக்குச் சொல்லியதைக் கூறுதும். "இந்தியக் காங்கிரஸ் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றியிருந்தமையினாலும், ஆலயப்பிரவேசம் சர்வாதிகார முறையில் கொண்டு வந்ததினாலும், சமய அபிமானிகள் எழுப்பிய எதிர்ப்புக் குரல் ஒலிபெருக்கியில் வரும் ஒலிபோல் காந்தியின் தலைமையில் காங்கிரஸ்காரர் எழுப்பிய குரலினால் மறைக்கப்பட்டமையினாலும் ஆலயப்பிரவேசம் நடைமுறையில் சட்டமாக வந்து விட்டது."

மொழிச் சுயாதீனம் வேண்டுமென்று நம்நாட்டில் கூச்சலிடுகின்ற அரசியல் வாதிகளுக்குச் சமயசுயாதீனம் எப்படி இருக்க வேண்டுமென்று தெரியாமலிருப்பது பெரிய ஒரு விந்தையாகும். அரசியல் வாதிகள் செய்யும் சமயத்துரோகச் செயல்கள் பழங்காலத்தில் கிறீஸ்தவர்கள் மதமாற்றத்திற்குச் செய்த தந்திரங்களிலும் மோசமாக இருக்கின்றன. ஏனெனில், உட்பகை புறப்பகையிலும் கூடிய தீமைதருவது. அரசியல் வாதிகள் சைவசமயத்தில் திருத்தம் வேண்டுமென்று பிரசாரஞ் செய்வார்கள்; ஆனல் மற்றுஞ் சமயங்களில் திருத்தங் கொண்டுவரத் துணியமாட்டார்கள். சிங்கள மொழியைத் தமிழர்களின் காதுக்குள் திணிக்கவேண்டாம் என்று கூச்சலிடுகின்ற இவர்கள், ஏனே ஆகமத்தில் நம்பிக்கையுள்ளவர்களின் காதுக்குள் ஆகம விரோதமான காரியங்களைத் திணிக்கப் பார்க்கின்றனர்கள். இவர்களிடம் இருக்கும் பகுத்தறிவு எவ்வண்ணமுடையது என்பதை யாமறியோம். இலங்கையரசாங்கம் சர்வாதிகார முறையில் சமய சம்பந்தமான சட்டங்கள் கொண்டுவரமாட்டார்கள் என்று நம்புகிறேம். ஏனெனில், சமயத்துறையில் சட்டங் கொண்டுவருவது இலங்கை அரசியல் சட்டத்தின் 29-ம் பிரிவு விதிகளுக்கும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபன சாசனத்திற்கும் முற்றும் விரோதமாகும்.

சைவசமய வளர்ச்சியின் சரித்திரத்தை நாம் நோக்கினல், சமயாசாரம் ஒரு காலத்தில் குன்றியும் ஒரு காலத்தில் பெருகியும் இருந்திருக்கின்றது. திருஞானசம்பந்தர், பாண்டிய அரசனைச் சமணசமயிகள் சூழ்ச்சியிலிருந்து மீட்டுத்தந்தார். திருநாவுக்கரசரும் பல்லவ அரசன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறிப் பல சைவாலயங்களைக் கட்டுவிப்பதற்குக் காரணராகவிருந்தார். இக்காலத்திலும் ‘கொம்மூனிசிசம்’ என்ற அரசியற் சமயத்தின் சூழ்ச்சியிலிருந்து மீட்பதற்கு எம்மிடை ஓர் அவதார புருஷர் தோன்றவேண்டும்.

இக்கால மக்கள் நாகரீகமடைந்து வருகிறார்கள் என்றும், மனிதனுடைய அடிப்படை உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமென்றும் பெரியோர்கள் பேசிவருவது

நாமறிந்த விடயம். ஆனால், ஆலயப்பிரவேச விஷயத்தில் அரசியல்வாதிகள் நடக்கும்முறை எமக்கு நாகரீகமடைந்தவர்களின் செயலாகுமா? என்பது சந்தேகிக்கவேண்டியிருக்கின்றது. கிறீஸ்த சமய சரித்திரத்தைப் பார்த்தால், மார்ட்டின் லூதர் பழைய கத்தோலிக்க மதத்தில் உள்ள சில கோட்பாடுகளை எதிர்த்தார். அதன்பயனாகத் தோன்றியதே புரோற்றெஸ்ரன் (Protestant) கிறீஸ்த மதம் ஆகும். அரசியல்வாதிகள் ஆலயப்பிரவேசம் ஆகமவிரோதம் என்பதை உணர்ந்து விட்டால் சைவத்துக்குப் பெருநன்மையாகும் அப்படி நம்பிக்கையில்லாத போலிச்சைவர்களை ஒரு பகிரங்க மேடையில் தகுந்த நடுவன் வைத்து விவாதிக்கவரும்படி இச்சபை சவால் விடுகின்றது. ஆகம நம்பிக்கையில்லாத இந்து சமயத்தவர்களே நாகரீகமுற்ற இக்காலத்தில், நீங்கள் வேறாகப்பிரிந்து, கிறீஸ்தவர்கள் போல் இருசமயத்தவர்களாகவும், வெவ்வேறு கோவில்களை உடையவர்களாகவும், ஒற்றுமையாகவும் வாழும்படி இச்சபை வேண்டுகின்றது.

ஆலயப்பிரவேச உரிமையும் அரசாங்க வாக்குரிமை போன்றதாகச் சிலர் இக்காலத்தில் எண்ணிவிடுகிறார்கள். அது ஒரு மூடத்தனமான எண்ணமாகும் ஆலயபரிபாலனத்துக்கு வேதசிவாகமங்களே பிரமாண நூல்களாகும். அதை மீற எண்ணுபவர்கள் நரகத்திற் சென்று துன்பத்தை அனுபவிக்க விரும்புகின்ற 'உத்தமர்கள்' ஆவார்கள்.

ஒருவன் பிறக்கும்போது கிரகங்கள் நிற்கின்ற நிலையினாலும் பின்பு அவைகளின் சஞ்சாரத்தினாலும் அவன் வாழ்க்கைப் பயன்கள் அறியப்பட்டுவருகின்றன என்று எண்ணுவது ஒரு மூட நம்பிக்கையென்பதாகச் சில புறச்சமயத்தவர் போதித்து வந்தார்கள். மேல்நாட்டு நாகரீக மயக்கத்தினால் சாதக கருமஞ் செய்யாதுவிட்ட சில பெரியார்கள் எம்மிடையும் உண்டு அவர்களில் பலர் இப்பொழுது சாதகம் எழுதிவைக்கவும் கிரகபலன் பார்க்கவும் தொடங்கி விட்டார்கள். இப்பொழுது பொதுவாக எல்லாச் சமயத்தவர்களும் சோதிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதனால்

எல்லாப் பத்திரிகைகளும் சோதிட பலன்களைப் பிரசுரித்து வருகின்றன. கிரகசாரபலன்கள் விஞ்ஞான முறையில் அத்தாட்சிப்படுத்த முடியாதவைகள். சிறந்த சோதிடர்கள் அனுபவரீதியில்தான் பலாபலன்கள் கூறிவருகின்றார்கள்.

ஆன்மாவுக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பும் ஆசார ஒழுங்குகளும் ஒருவன் வாழ்க்கையை எப்படிப் பாதிக்கின்றன என்பதை இலகுவில் அத்தாட்சிப்படுத்த இயலாது. வேத சிவாகமங்களே அவற்றை எமக்கு விளக்கிக் கூறுகின்றன. ஒரு சமயம் கள்ளுண்ணுதல் பாவமென்று கூறும்; இன்னோர் சமயம் அதைப் புண்ணியமென்று சொல்லும்; இப்படியான மாறுபட்ட கொள்கைகள் சமயங்களுக்கிடையே உண்டென்பது யாவரும் அறிந்த விஷயம். கொலை செய்தவன் அரசதண்டனைக்கு ஒருகால் தப்புவது உண்டு. அதனால் அப்பாவஞ்செய்யும் அவன் பாவபலனிலிருந்து தப்பிவிட்டான் என்று கூறமுடியாது. முக்காலங்களையும் உணர்ந்த ஞானிகளேயன்றி மற்றையவர்கள் எப்பிறப்பில் அதற்குரிய தண்டனையை அவன் பெறுவான் என்று கூறமாட்டார்கள். உண்மையைக் கூறுகின்றசைவர்கள், பாவஞ் செய்வதால் வரும் பலன்களை, அரசியல்வாதிகள் ஆலயப்பிரவேசம் சமயப் பிரச்சனையன்று சமூகப் பிரச்சனையே என்று, சமூக முன்னேற்றமென்ற இனிப்புக்குள் மறைத்துக் கூறிவருவது போல, மறைத்துக் கூறமாட்டார்கள். அவர்கள் ஆன்ம ஈடேற்றத்துக்குத் துணையாயுள்ள ஒழுக்க முறைகள் எவையென்றும் அவைகட்கும் பாதகமான முறைகள் எவையென்றும் கூறுவார்கள்.

மேல்நாட்டிலே, இந்திய கலாசாரத்தில் சிறந்த அறிவுடைய பலர் இருக்கின்றார்கள். அவர்களுட் சிலர் எகிப்திய, சுமேரிய, கிரேக்க, ரோமாபுரி நாகரீகங்களெல்லாம் அழிந்து போகவும் இந்திய நாகரீகம் அழியாதிருப்பதற்குக் காரணம் இந்தியாவிலுள்ள சாதிக்கட்டுப்பாடே என்று கூறியிருக்கின்றார்கள். அது முற்றும் உண்மையே. இந்திய நாகரீகம் வர்ண ஆச்சிரம தர்மங்கள் என்ற கட்டுக் கோப்பிலேயே வளர்ந்து வந்திருக்கின்றது. அக்கட்டுக் கோப்புத்தான்,

எதிர்காலத்தும் நன்மை பயக்கக்கூடியதாகவிருக்கும். மேல் நாட்டு நாகரீகத்தில் தோன்றிய பிரச்சனைகள் அக்கட்டுக் கோப்பில் தோன்றியனவன்று. அப்பிரச்சனைகளாவன குடும்பக் கட்டுப்பாடு, அனாதைப் பிள்ளைகள், வேலையில்லாத் திண்டாட்டம், மனத்தளர்ச்சி முதலியனவாகும். அவர்கள் கூறுங் கருத்து மேல்வரும் உதாரணத்தால் வலியுறுத்தப் படும் வடமொழி நூல்களிலே பல கலைப்பொக்கிஷங்கள் புதைந்து கிடக்கின்றன என்பது அறிஞர்களின் முடிபாகும். அவற்றைப் பாதுகாத்து வந்தவர்கள் பிராமண குலத்தவர் என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். ஏனெனில், அவர் களின் வர்ணதருமம் ஓதுதல், ஓதுவித்தல் முதலியனவாகும். அவர்கள் அதை அப்படிப் பாதுகாத்து வராதிருப்பின், இந் திய நாகரீகமும் அழிந்துபோன ஒரு பழைய நாகரீகமாக இருந்திருக்கும். நாங்கள் இப்போது சுதந்திரம் பெற்றிருந்தா லும், சைவ அநுட்டானம் குன்றிவரும் இக்காலத்தில் சைவாபிமானிகள் எல்லோரும் ஒருங்கு திரண்டு சமயத்திற்கு ஆக்கபூர்வமானசெயல்களைச் செய்ய வேண்டும். எல்லா வகுப் பினரும் நன்மை அடையக்கூடிய முறையில் திட்டங்கள் வகுக்க வேண்டும் எல்லாவற்றிலும் முதன்மையாக வேண் டப்படுவது. சைவ கலாச்சாரத்தைப் பேணிவளர்க்கும் ஓர் பல்கலைக் கழகமாகும். முற்காலத்தில் கலைகள் எல்லாம் இறைவனருள் போற்றுவதற்கே பயன்பட்டு வந்தன.

> "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழா ரெனின்"

என்ற அடிப்படையில் கலாச்சாரம் அமைந்திருந்தது. மேல் நாட்டு நாகரீகத்தின் மயக்கத்தால் கலாச்சாரம் இப்போது மாறி அமைகின்றது அதைச் சைவாபிமானிகள் கவனத் திற்குக் கொண்டுவர நாம் விரும்புகிறோம். அதற்கு ஆவன செய்வது சைவ மக்களின் கடமையாகும்.

சிவபெருமான் குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூவிடத் தும் நின்று விசேடவருள் புரிகின்றார். அவற்றுள் லிங்கம் என்பது, ஆலயத்துள் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியைக்

குறிக்கும். அதனுற்றுன் ஔவைப் பிராட்டியார், "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்று கூறிப்போந்தனர். அவருடைய அருள் வாக்குகளின்படி ஒழுகிவருவோமே யானல், நாம் ஆன்ம லாபமடைவது திண்ணம். சமய அபிமானம் உடைய சைவன் எச்சாதியில் பிறந்தாலும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் அருட்சத்தியை ஏற்றமடையச் செய்யும் ஒழுக்கத்தில் நின்று வழிபாடு இயற்றுவான் அம்மூர்த்தியின் அருட்சக்திக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய எச்செயலிலும் ஈடுபடமாட்டான். காந்தசக்தி உடைய இரும்பைப் பேணி வைத்திராவிட்டால் அச்சக்தி அகலும். நம்நாட்டில் அது நடைமுறையில் இருப்பதைக் காணலாம். ஓர் ஆலயத்தில் திருவிழா தொடங்கினல் அம் மூர்த்தியில் பக்தியுடையவர்கள் விரதம் அநுட்டிப்பார்கள் அக்காலத்தில் கள்ளுக்குடித்தல், மற்சமாமிசம் புசித்தல் ஆகிய பாவச் செயல்களைச் செய்யமாட்டார்கள். இப்படியான சைவ அநுட்டானத்தின் பலன்களை அநுட்டித்தவர்களே அறிவார்கள்; அநுட்டியாதவர்கள் அறியமாட்டார்கள்.

சைவ ஒழுக்கத்தில் நின்ற எங்கள் மூதாதையர்கள் சிவாகம விதிப்படி புதிய சைவாலயங்களைக் கட்டியும் பழைய ஆலயங்களைப் புதுப்பித்தும் மற்றும் நித்திய நைமித்தியங்களுக்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்தோ பொருள் உதவிசெய்தோ வந்திருக்கின்றார்கள். அவர்கள் அப்படிச் செய்து வந்தது தங்கள் ஆன்மலாபத்தை மாத்திரம் கருதியன்று. அவர்கள், சைவ நன்மக்கள் எல்லோரும் விதிப்படி ஆலய தரிசனஞ் செய்து, ஆன்மலாபம் பெற வேண்டுமென்ற உயரிய கருத்தும் உடையவர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளக்கமடைய வேண்டுமென்ற விருப்புடைய சைவாபிமானிகளே! விழிமின் எழுமின்! சிவதொண்டு, செய்வதே நமது கடன் என்பதை உணருகின்ற ஒரு குலத்தவர்களே! அரசியல் வாதிகளின் ஏமாற்றில் அகப்படாமல், வர்ண ஆச்சிரம நெறி நின்று ஆலய தரிசனஞ் செய்து, இன்மையின்பங்கள் பெற்று

மோட்ச பாதையில் முன்னேற்றம் அடைந்து, சிவஞான போத அனுபவம் பெற்று உய்யும் வண்ணம் இச்சபை வேண்டுகின்றது. மேலும் உண்மைச் சைவசமய நெறியில் ஒழுகும் மேன்மக்கள் யாவரும் ஆகம விதியைக் கடவாது, எல்லோரிடத்தும் ஒரே வகையான அன்பு செலுத்தி வருவதே பண்பும் கடமையுமாகும் என்பதை உணர்ந்து இகபர சுகங்களைப் பெற்று வாழும்படி வேண்டுகிறோம்.

---

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகர்கம்,
மயிலணி :: சுன்னாகம்,
இலங்கை.

---

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.—230-67.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ

சிவமயம்

# அகில இலங்கை வேதாகம சைவ சித்தாந்த சபை

சைவாபிமானச் செல்வர்களே!

எங்கள் வேதாகம சபை, மகாநாடு நடாத்தவும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடவும், சைவசமய ஆசார ஒழுக்கத்தில் வாழக்கூடிய அறிவைப் புகட்டுவதற்கு வேண்டிய பழைய வெளியீடுகளைப் புதுப் பதிப்பாக வெளியிடுவதற்கும் மற்றும் சபை அலுவல்களுக்கும் பொதுநிதி தேவைப் படுகிறது. எனவே தங்களால் இயன்றளவு பொருள் இச்சபைக்கு உபகரிக்குமாறு வேண்டுகிறோம். இச்சபைக்கு பொருள் உதவியோ, சரீர உதவியோ புரிந்து வேத சிவாகமங்களில் நம்பிக்கையுடைய சைவர்கள் எல்லோரும் இச் சபையில் அங்கத்தவர்களாகக் கருதப்பட்டு பதியப் படுவர்.

பிரம்ம ஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள்
தலைவர்

செ. சோமசேகரம்
S. இராமலிங்கம்
இணைக் காரியதரிசிகள்

கா. நமசிவாயம்
தனாதிகாரி
அ. இ. வே. சை. ச.
"கயிலை வாசம்"
சுன்னாகம்